# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு2029 மாசி 27 புதன்கிழமை (11-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்:89

# புல்மோட்டையில் புலிகள்–கடற்படை உக்கிரச் சண்டை

## இரு தரப்பினரும் முரணான தகவல்

கொழும்பு, மார்ச் 11

திருகோணமலைக்கும், முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட புல்மோட்டைக் கடற் பிரதேசத்தில் கடற் படையினருக்கும், கடற் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இரவு கடுஞ் சண்டை இடம்பெற்றுது.

இச்சமர் குறித்து இரு தரப்பும் ஒன்றுக் கொன்று முரணான தகவல்களை வெளியிட்டிருக்கின்றன.

முல்லைத்தீவை அடுத்துள்ள கட்லில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் புலிகளின் பலபடகுகள் நாசமாக்கப்பட்டன என்றும்—

அவற்றில் பயணம் செய்த புலிகள் பலர் கொல்லப்பட்டனர் என்றும் —

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலக அறிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தன்னைத் தானே சுட்ட கான்ஸ்டபிள்

மட்டக்களப்பு, மார்ச் 11

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் காவல் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக நேற்றுக் காலை தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். (உ-21)

## புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு, மார்ச் 11

மட்டக்களப்பு விமானப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை 6.30 மணிக்கு மோட்டார் தாக்குதல்கள் மேற்கொண்டனர். சேத விவரம் தெரியவரவில்லை. (உ–21)

## கடற்படையின் படகு மோதியதால் வலது கை துண்டிக்கப்பட்ட மீனவர்

### பருத்தித்துறை பகுதியில் அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மீனவரின் கட்டுமரம் மீது கடற்படைப்படகு மோதியதால், கடலில் வீழ்ந்த மீனவர்களில்ஒருவர்கடற்படைப் படகின் நீருந்து விசிறியில் (புறொப்ளரில்) சிக்கி வலது கைதுண்டிக்கப் பட்டதுடன் வயிற்றுப் பகுதியிலும் கால்களிலும் பெரும் வெட்டுக் காயங்களுக்கும்இலக்கானார். ஏனைய இரண்டு மீனவர்கள் தப்பினர்.

பருத்தித்துறை முனைக் கடற் பிராந்தியத்தில் கரையை அண்டிய பகுதியில் நேற்று அதிகாலை 5மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

முனை, சென் தோமஸ் ஒழுங்கையைச் சேர்ந்த— இரண்டு பிள்ளைகளின் தந்தையான– தியோகுப்பிள்ளை தோமஸ் ஜெயலூசியா(வயது 25) என்ற மீனவரே இவ்வாறு படுகாயமடைந்தவர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

கட்டுமரத்தில் அதிகாலை வேளை கடற்றொழிலுக்குச் சென்ற இவர்கள் மூவரும் கரையை அண்டிய பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது, கடற்படையின் படகு ஒன்று திடீரென அதி வேகமாக — முட்ட வருவது போல — கட்டுமரத்தை நோக்கி சீறிக்கொண்டு வந்தது.

பீதியால் உறைந்து கூச்சலிட்ட மூவரும், தொடர்ந்து கடற்படைப் படகு விரைந்து வந்து நெருங்கியதை அடுத்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக கடலுக்குள் குதித்தனர். அவ்வேளை கடற்படைப் படகு கட்டுமரத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தம்பலகமம் படுகொலைகள்

## 21 பொலீஸாருக்கும் தொடர்ந்து மறியல்!

திருகோணமலை தம்பலகமம் பாரதிபுரத்தில் எட்டுத் தமிழ்இளைஞர் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 21 பொலீஸாரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு திருமலை மாவட்ட நீதிவான் பி. சொர்ணராஜ் உத்தரவிட்டார்.

இவர்கள் நேற்று திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுப் பின் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 20 பொலீஸாரில் 18 பேர் மட்டுமே நேற்று நீதிமன்றில் ஆஜரானார்கள்.

ஆஜராகாத இரு பொலீஸாரையும் கைதுசெய்யும்படி நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். (உ–3)

## தாயகம் திரும்பிய 43 தமிழர்கள் கைது!

### கட்டுநாயக்காவில் வைத்து

கொழும்பு, மார்ச் 11

ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக முன்னாள் சோவியத் குடியரசு நாடான அஸர்பஜானில்;தங்கியிருந்து, மீள இலங்கை திரும்பிய 43 தமிழர்கள் கட்டுநாயக்காவில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் தமது பயணம் பயன் அளிக்காத காரணத்தால் அங்கிருந்த 60 இலங்கையர்கள் நேற்று முன்தினம் அங்கிருந்து மீண்டும் தாயகம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். முதல்வர் இன்றுபதவியேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். மாநகர சபை மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரன் இன்று காலை 10.15 மணிக்கும் 11.15 மணிக்கும் இடையில் — சுபநேரத்தில்— பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

யாழ். இந்து விடுதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபை அலுவலகத்தில் சட்டத்தரணியும், சமாதான நீதிவானுமாகிய க. கேசவன் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்வார்.

அவரைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மாநகர சபைக்கு தெரிவான ஏனைய எட்டு உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்வர்.

தெரிவர்ன உறுப்பினர்களில் இராஜிநாமாச் செய்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் வெள்ளி பதவியேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரி பிரதேச சபைக்குத் தெரிவான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்பு வைபவம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

அன்று காலை 10 மணிக்கு புளொட் அமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அன்ரன் சபைத்தலைவராகப் பதவியேற்பார்.

புளொட் அமைப்பு வெற்றியீட்டியிருக்கும் —

சாவகச்சேரி நகரசபையில் அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதியும் —

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எதிர்வரும் 20ஆம் திகதியும்—

பதவியேற்பார்கள் என்று புளொட் அமைப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3-5–117)

## குருநகர்ப் பகுதியில் மோதல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் ஞாயிறு இரவும் நேற்று முன்தினம் இரவும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இரவு 9.50 மணியளவில் குருநகர்ப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியேயிருந்து புலிகளின் சிறிய குழு ஒன்று சிறு ஆயுதங்களைக் கொண்டு சுட்டதாகவும் —

குருநகர் கடற்பிரதேசத்தில் சில படகுகள் காணப்பட்டதாகவும் —

பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இதேவேளை இரவுவேளை குருநகர்ப் பகுதியில் சரமாரியாக வேட்டுச் சத்தங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்காவில்

## புலிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு, மார்ச் 11

விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிட்டனில் தனது நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்து, அதனை ஆட்சேபித்து அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களும், பௌத்த குருமாரும் அண்மையில் அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் றொசன்பேட் நகரில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்குமுன் நடைபெற்றது.

பிரிட்டனில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர். (உ–3)

## வாஜ்பாய் தலைமையில் புதிய அரசு அமையும்?

### ஜனாதிபதி அவருக்கு கடிதம்

புதுடில்லி, மார்ச் 11

பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் புதிய இந்திய அரசு அமைவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

புதிய அரசு அமைக்கும் விடயம் சம்பந்தமாக இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் நேற்று வாஜ்பாய்க்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

நிலையான அரசு அமைக்கக் கூடிய வலு வாஜ்பாய்க்கு உள்ளதா என்பதைத் தமக்குத் தெரிவிக்கும்படி ஜனாதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை விவரம்

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் நடத்தப்படவிருக்கும் பொதுக் கலைமாணிப் பரீட்சைஎதிர்வரும் 23 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 26 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை நேற்று வெளிவாரிப் பரீட்சைப்பிரிவினரால் யாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலேயேஇப்பரீட்சை நடத்தப்பட்டு வந்தது எனினும் தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகவும், போக்குவரத்தில் உள்ள இடையூறுகள் காரணமாகவும் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்கு செய்ய வேண்டுமென்று யாழ். மாணவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கமையவே எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஏப்ரல் 24 ஆம் திகதி வரை நடைபெறும்இப்பரீட்சைக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

பரீட்சைநேர அட்டவணை பிரதியை 'உதயன்' பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (உ-7)


## வாழ்த்துகின்றோம்

இன்று யாழ். மாநகர முதல்வராக பதவியேற்கும் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

**திருமதி சறோஜினி யோகேஸ்வரன்**

அவர்களை பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

சி/3090)



## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தின் கணக்காளராக கடமையாற்றிய

அமரர்

**ஆறுமுகம் கெந்தீஸ்வரன்**

அவர்களது திடீர் மறைவினால் ஆறாத் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெஷன் ஹவுஸ் ஸ்தாபனத்தாரும்,
ஊழியர்களும்.

பெஷன் ஹவுஸ்,
இல. 65, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (53988)



கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்
(காளிகோயில்)

## மகாசபை அங்கத்தவர்கள் சந்தாப்பணம்

அன்புடையீர்!

போர்க்கால சூழ்நிலையின் இடம்பெயர்வால் மேற்படி ஆலய மகாசபை அங்கத்தவர்களிடமிருந்து சந்தாப்பணம் பெறமுடியாதிருந்தது.

மேற்படி ஆலய மகாசபை அங்கத்தவர்களாக ஏற்கனவே சேர்ந்த அனைவரையும் 1993, 1994, 1995, 1996, 1997, 1998 ஆகிய வருடங்களுக்கான சந்தாப்பணம் ரூபா தொண்ணூறையும் (90/-) மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு (31-03-1998) முன்பதாக ஆலய பணிமனையில் செலுத்தித் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நன்றி

(49988) பரிபாலன சபையினர்.



## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

சகல வர்த்தகர்களுக்குமான

**அன்பான வேண்டுகோள்**

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் யாழ். வர்த்தகர்களிடம் பெறப்பட்ட கருத்துக் கணிப்பிற்கு அமைய **12 — 03 — 98** வியாழக்கிழமை தொடக்கம் சகல ஞாயிறு, போயா தினங்கள் உட்பட வர்த்தக விடுமுறை தினங்களிலும் கடைகள் பூட்டப்பட்டு வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும். சனிக்கிழமைகளில் முழுநேரமும் கடைகள் திறக்கப்படலாம். அதற்கான மேலதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும். இதற்கமைய ஒத்துழையாத வர்த்தக நிறுவனங்கள் தொடர்பாக ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது வணிகர் கழகம் பொறுப்பேற்க மாட்டாது. ஆகவே சகல வர்த்தகப் பெருமக்களும் எமது கழகத்துடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
10 - 03 - 98 (சி/3089)


# நினைவாலயத்தில் மலரஞ்சலி

தந்தை செல்வாவின் நூறாவது பிறந்த நாளையொட்டி இம்மாதம் 31 ஆம் திகதியன்று யாழ். நகரில் உள்ள அவரது நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

தந்தை செல்வா நினைவுக் குழுவினர் அன்று மு. ப. 10.00 மணிக்கு மலர் அஞ்சலி செய்வர்.

அன்றைய தினம் தந்தை செல்வாவுக்கு மிகவும் விருப்பமான நாதஸ்வர இசையை ஒலிபரப்புச் செய்யுமாறுவர்த்தக விளம்பர நிறுவனங்களுக்கும் வீடியோ மற்றும் திரை அரங்குகளுக்கும் நினைவுக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# கப்பலில் தபால் பொதிகள்

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 105 தபாற் பொதிகள் நேற்று செவ்வாய் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

தபால்களைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணிகள் இன்று புதன் ஆரம்பமாகும்.

யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்படும் தபால்கள் யாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதால் வெளியிடங்களுக்கு தபால்களை அனுப்ப விரும்புவோர் நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகத்தில் அவற்றைச் சேர்ப்பிக்குமாறு யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று தொடக்கம்
புதியவெளியீடுகளான
அஜித்குமார் நடித்த
**காதல் மன்னன்**
காலை:- 10-30

பாக்கியராஜ் - நக்மா
சாய்குமார் நடித்த
**வேட்டியை மடிச்சுக்கட்டு**
மாலை:- 2-30

(53782)



நெல்லியடி

**மஹாத்மா**

வெண் திரையில்

இன்று முதல்
விஜய் - சுபலட்சுமி
நடித்த
லவ் ருடே
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)


## திருத்தம்

கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலயம்-01, உதயன் 09 - 03 - 1998 ஆம் திகதிய இதழின் 6ஆம் பக்கத்தில் வெளியிட்ட

**கேள்வி அறிவித்தல்**

விளம்பரத்தின் அடியில் — நா. சுந்தரலிங்கம் பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், வலயம் - 01 எனப் பிரசுரமானது தவறாகும்.

நா. சுந்தரலிங்கம், கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், வலயம் - 01 என திருத்தி வாசிக்கவும். (ஆ—ர்)

# இட நெருக்கடியை தீர்க்க பாடசாலைக்குக் காணி

சண்டிலிப்பாய் மார்ச் 11

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நிலவும் இடநெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக பக்கத்தில் உள்ள எட்டு பரப்பு காணி ஒன்று சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர்மேற்கொண்ட முயற்சியினால் இதற்கான நிதி சேகரிக்கப்பட்டு காணி பெறப்பட்டுள்ளதாக மகா வித்தியாலய அதிபர் ச. சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

இதே வேளை இக் காணியில் சுற்று மதில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருவதால் நிரந்தரமான வகுப்பறைக் கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உதவுமாறு யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர், திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-135)

# சமயதீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 11

நல்லை ஆதீனம் பௌர்ணமி தினந்தோறும் நடத்தி வரும் பாடசாலை மாணவர்களுக்கான சமய தீட்சைத் தொடரின் ஓர் அங்கமாக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சமய தீட்சை வழங்கும் வைபவம் நடைபெறும். (இ-4)

# வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 11

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் நடத்தும் திருவள்ளுவர் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படும். பண்டிதர் ராஜகுருவின் சிறப்புரையும் இடம்பெறும். (இ-4)

# வேம்படியில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 11

வேம்படி மகளிர் கல்லூரியில் புதிதாகப் பொருத்தப்பட்ட உள்ளக தொடர்பு பரிவர்த்தனை சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி இதனை ஆரம்பித்து வைப்பார்.

எலக்ரோனிக் என்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட் நிறுவனம் இந்தத் தொடர்பு பரிவர்த்தனைச் சேவையின் அமைப்பு வேலைகளை மேற்கொண்டது. (இ)

# நெடுந்தீவு பொதுசன உதவிப்பணம்


நெடுந்தீவு பிரதம தபாலகத்திலும் உபதபாலகங்களிலும் இதுவரை ஜனவரி மாதத்துக்கான பொதுசன மாதாந்தஉதவிப்பணத்தைப் பெறாதவர்கள் உடனடியாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சென்று புதிய தொடர்இலக்கத்தைப் பெற்று பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு நெடுந்தீவு தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாரத்தினுள் எடுக்கத் தவறியோருக்கு பின்னர் எக்காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக கலைப்பீட பரிசில்கள்

1994 ஆம் கல்வியாண்டுத் தேர்விலே திறமைச் சித்தி பெற்ற கலைப்பீட மாணவர்களுக்கான தம்பையா முதலியார் சத்திரம் நிதியப் பரிசில்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிககு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சபை அறையில் நடைபெறவிருக்கும் கலைப்பீட அவைக் கூட்டத்தின் போது வழங்கப்படும்.

பரிசில் பெறும் மாணவர்களுடைய விவரங்களை கலைப்பீடாதிபதியின் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
► போட்டோ பிரதிகள்
► லமினேட்டிங்
(கவரிடுதல்)
நாடவேண்டிய இடம்:
**அருண்**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

**சிவசுப்பிரமணியம் பாலச்சந்திரன்**

[லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்]

ஏழாலை மேற்கை ப்பிறப்பிடமாகவும், நாவலர் றோட், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சி. பாலச்சந்திரன் 10-03-98 அன்று காலமானார்.

இவர் சிவசுப்பிரமணியம்— தெய்வநாயகி தம்பதிகளின் மகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பத்மநாதன், பவானந்தன், பானுமதி, பவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகன்யா, சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. நாகேஸ்வரி
(மனைவி)

நாவலர் றோட்,
நல்லூர். (53992)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேசரியின் பதவி விலகலுக்கு கட்சித் தலைவர்கள் வரவேற்பு!

சென்னை, மார்ச் 11

காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக சீதாராம் கேசரி முடிவு செய்திருப்பதை கட்சியின் பல தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

கட்சியின் எதிர்காலத்துக்கு இது நிச்சயமாக நன்மை பயக்கும் என சரத்பவார் அறிவித்துள்ளார்.

கட்சித் தலைமையை இளைய தலைமுறையினரிடம் வழங்க கேசரி விரும்புகிறார் என்பதை அவரது பதவி விலகல் முடிவு எடுத்துக் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே சமயம் தலைமைப் பதவியில் இருந்து விலகும் அறிவிப்புக்கு முன் கட்சித் தோழர்களை கேசரி கலந்து கொள்ளவில்லை என பிரணவ் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

ராஜேஷ் பைலட் கருத்துத்



தெரிவிக்கையில், கட்சித் தலைவர் பதவியை சோனியா காந்தி ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் காங்கிரஸ் தலைமை குறித்துக் கட்சித் தொண்டர்களின் உணர்வுகளுக்கு ஏற்ப காங்கிரஸ் செயற்குழு விரைவில் முடிவெடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தீவிரமான பிரச்சினைகளை கேசரியின் பதவி விலகல் எடுத்துக் காட்டுவதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா கூறினார்.

எனினும் இது அந்தக் கட்சியின் உள் விவகாரம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(இ-9)

## அணு மின் உற்பத்தி நிலையம்

மொஸ்கோ, மார்ச் 11

ஈரானின் தென்பகுதியில் உள்ள பஸீர் என்ற இடத்தில் நிர்மாணித்து வரும் அணுசக்தி மின் உற்பத்தி நிலையத்தை ரஷ்யா பூர்த்தி செய்ய உள்ளது.

அமெரிக்காவின் வற்புறுத்தல் காரணமாக சர்ச்சைக்குரிய இந்தத்திட்டத்திலிருந்து உக்ரெய்ன் விலகிக்கொள்ள முடிவு செய்துள்ள போதிலும் ரஷ்யா இந்த வேலைத்திட்டத்தை பூர்த்திசெய்ய உறுதி கொண்டுள்ளது.

(இ-9)

## ஆப்கானில் பனிச் சரிவு; 70 பேர் உயிரிழப்பு

காபூர், மார்ச் 11

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பெரும் பனிச்சரிவில் 70 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிராமம் ஒன்று பனிச்சரிவில் புதையுண்டுள்ளது.

தளபதி அஹமது ஸாவின் படைகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் —

கவாரி மாவட்டத்தில் இன்னொரு பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டு முக்கியபாதை மூடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பெண்களும் சிறுவர்களும் அதிகளவில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-9)

## 35 கிலோ வற்றாலை

ஹோசிமின்நகர், மார்ச் 11

வியட்நாமின் மத்திய மாகாணம் ஒன்றில் 35 கிலோ நிறையுடைய வற்றாலைக் கிழங்கு ஒன்றை விவசாயி ஒருவர் உற்பத்தி செய்துள்ளார்.

இது சாதாரண கிழங்கின் நிறையை விட பத்து மடங்கு அதிகமானதாகும்.

## ஜனாதிபதி கிளின்ரனுக்கு 'பிளேபோய்' ஆதரவு

நியுயோர்க், மார்ச் 11

அமெரிக்க அதிபராக திறமையான நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக மட்டுமே பில்கிளின்ரனைத் தேர்ந்தெடுத்துள்ளோமே தவிர பரிசுத்தமான பாப்பரசர் போன்று இருப்பதற்காக அல்ல.

பாலியல் உறவுகள் அவரது தனிப்பட்ட விவகாரம். பெரும்பான்மை அமெரிக்க மக்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இப்படி 'பிளேபோய்' என்ற அமெரிக்க சஞ்சிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

(இ-9)

## வடகொரியாவுக்கு உணவுப்பொருள் அனுப்புவதற்கு தென்கொரியா முடிவு

லண்டன், மார்ச். 11

பல ஆண்டுகளாக மிக மோசமான பஞ்சத்தில் சிக்கியுள்ள வட கொரியாவுக்கு 50 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை அனுப்பிவைக்கப் போவதாக தென் கொரியா அறிவித்துள்ளது.

இந்தப் பஞ்சம் காரணமாக வட கொரியாவில் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழக்கக் கூடிய அபாயம் எழுந்துள்ளது.

தாங்கள் வழங்க உள்ள இந்த உதவி சுமார் 1 கோடி டொலர்கள் மதிப்புள்ளதாகும் எனவும்—

உலக உணவுத் திட்டத்துடன் கலந்து ஆலோசித்த பின்னர் மேலும் உதவிகள் வழங்கப்படும் எனவும் தென் கொரியா அறிவித்துள்ளது.

உணவுப் பொருள்கள் வழங்கும் செயற்பாடு ஏப்ரல் மாத இறுதியில் ஆரம்பமாகும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-9)

## கடுகதி ரயிலில் குண்டு வெடிப்பு

### பாகிஸ்தானில் ஐவர் பலி!

கராச்சி, மார்ச் 11

பாகிஸ்தானில் பஞ்சாப் மாநிலத்தில் கடுகதி ரயில் ஒன்றில் நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் 5 பேர் உயிரிழந்தனர். 35 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நீர்ப்பாசனக் கால்வாய் ஒன்றுக்கு மேலான பாலம் ஒன்றை ரயில் கடக்கும் போதே குண்டு வெடித்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாகிஸ்தானின் தென் பகுதியில் நீதிமன்றம் ஒன்றில் குண்டு வெடித்ததனால் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பில் இருவர் உயிரிழந்ததாக பொலீஸார் ஏற்கனவே அறிவித்த போதும் அவர்களது சடலங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(இ-9)

## 3 நாக்குகள் கொண்ட விவசாயி

சென்னை, மார்ச் 11

மூன்று நாக்குகளைக் கொண்டிருந்த விவசாயி ஒருவரின் பிரச்சினை விஞ்ஞானிகளால் தீர்த்து வைக்கப் பட்டுள்ளது.

சியாங் செனுவா என்ற இந்த சீன விவசாயிக்கு குழந்தைப் பருவத்தின் போது இரண்டு நாக்குகள் கூடுதலாக வளர்ந்தன. இதனால் இவர் பேச முடியாமல் மிகவும் சிரமப்பட்டார்.

கடந்த 20 ஆண்டுகளாக இவர் திரவ உணவுகளை மட்டுமே உட்கொண்டு வந்தார்.

டாக்டர்கள் சத்திர சிகிச்சை மூலம் இவரது இரு நாக்குகளை அகற்றி இவரது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளனர்.

(இ-9)

## இனப் படுகொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

### அல்பேனியர்கள் நடத்தினர்

லண்டன், மார்ச் 11

யூகோஸ்லாவியாவின் பேஸோவா மாநிலத்தில் உள்ள றெனிக்கா நகரில் கடந்தவாரம் சேர்பியபடையினர் மேற்கொண்ட படை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிறிஸ்ரினா

உலக அரங்கில்

நகரில் கடந்த சனியன்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

றெனிக்கா நகரூடாக சேர்பிய படையினர் மேற்கொண்ட படைநடவடிக்கையின் போது 60 அல்பேனிய இனத்தவர்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இப்படுகொலையைக் கண்டித்து ஆயிரக்கணக்கான அல்பேனியர்கள் கடந்த சனியன்று பிறிஸ்ரினா நகரில் ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தினர்.

நாட்டில் அமைதி, சமாதானம் வேண்டும். அதுவும் வன்முறையின்றி வேண்டும் என்பதை வலியுறுத்தியே இப்பேரணி நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ''வி'' என்ற ஆங்கில எழுத்து வடிவில் தமது விரல்களை வைத்துக் கொண்டு கைகளை உயர்த்திய வண்ணம் சென்றனர்,

ஊர்வலத்தின் இறுதியில் கைகளை உயர்த்திய வண்ணம் ''றெனிக்கா'' ''றெனிக்கா'' என கோஷமிட்டனர். அல்பேனியர்களின் படுகொலைறெனிக்கா நகரில் இடம் பெற்றமையை நினைவு படுத்தும் வகையிலேயே இவர்கள் இவ்வாறு கோஷமிட்டதாகக் கூறப்பட்டது.

(இ-7)

## தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல முழு நாட்டுக்கும் தி.மு.க. அச்சுறுத்து

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, மார்ச் 11

தி.மு.க அரசு தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல நாடு முழுவதுக்குமே அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் தி.மு.க அரசைக் கலைக்கும்படி நாம் கோருவோம்.

புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய செல்வி ஜெயலலிதா விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,பாரதீயஜனதாக்கட்சிக்கு அண்ணா தி.மு.க வழங்கும் ஆதரவு முழுமையானது; அத்துடன் நிபந்தனையற்றது.

பாரதீய ஜனதாவுக்குஎமது கட்சி வழங்கும் ஆதரவுக்கு எந்த விதமான அரசியல் காரணங்களும் இல்லை என்று கூறினார்.

வெளியில் இருந்து ஆதரவு வழங்குவது பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு, தேர்தலுக்கு முன்பே தாம் கூட்டணி அமைத்துக் கொண்டதாகவும் ஆகவே அதன் ஒரு பகுதியாகவே இந்தச் செயற்பாடு விளங்குவதாகவும் ஜெயலலிதா சொன்னார்.

கோயம்புத்தூரில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு முதலமைச்சர் கருணாநிதி தயக்கம் காட்டுவது குறித்து வியப்படைவதாகவும் ஜெயலலிதா தெரிவித்தார்.

(இ-9)

## முன்னாள் அமைச்சர் வெற்றி

ஜம்மு - காஷ்மீரில் அனர்ந்த நார் மக்களவைத் தொகுதியில் இருந்து காங்கிரஸ் வேட்பாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான முக்தி முகமதுசயீர் வெற்றி பெற்றுள்ளார்.

தம்மை எதிர்த்து போட்டியிட்ட தேசிய மாநாட்டுக் கட்சியின் வேட்பாளர் முகமது யூசுய் டாங்கை 52 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்கடித்தார்.

ஜனதாதள் கட்சியின் வேட்பாளராக மக்மூர்காவையும் வேறு 11 வேட்பாளர்களையும் தோற்கடித்து [illegible] மாநிலத்திலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## இன்சாட் - 2

சென்னை. மார்ச் 11

இந்தியாவின் இரண்டாவது தலைமுறை தகவல் தொடர்பு செயற்கைக் கோளான 'இன்சாட்-2 இ' இந்த ஆண்டு ஒக்ரோபரில் புவிப்பாதையில் செலுத்தப் படும்.

62 கோடி ரூபா பெறுமதியான இந்தச் செயற்கைக் கோள் ஒகஸ்ற் மாதம் [illegible] கோருவுக்கு அனுப்பப்பட்டு அரியான்— 4 ராக்கெட்டில் செலுத்தப்பட உள்ளது.

(இ-9)

## றுவாண்டாவில் 135 பேர் பலி!

கிக்காலி, மார்ச் 11

றுவாண்டாவில் மத்திய பகுதி மாநிலமான கிட்டாராமாவில் றுவாண்டா இராணுவத்துக்கும் ஹூட்டு இனக் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 135 பேர் வரை உயிரிழந்தனர்.

கொல்லப்பட்டோரில் 120 பேர் வரை கிளர்ச்சியாளர்கள் இந்தப் பகுதியில் உள்ள ஹூட்டு கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிளர்ச்சியாளர்கள் பலர் இராணுவ சுற்றிவளைப்புக்கு உள்ளாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தத்தில் இறங்க தபால் ஊழியர்கள் முடிவு

கொழும்பு மார்ச். 11 பதினேழு கோரிக்கைகளை முன்வைத்து தபால் திணைக்களத்தைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் நாளை 12 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து வேலை நிறுத்தத்தில் குதிப்பது எனத் தீர்மானித்துள்ளனர்.

ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறைத் தினங்களில் தபால் பணிமனைகளை மூடுவது —

தொழிற்சங்க வாதிகளைப் பழிவாங்கும் நோக்கில் சட்ட விரோதமான முறையில் இடமாற்றங்களை மேற்கொள்ளுவது—

சம்பள முரண்பாடுகளை நீக்குவது ஆகிய 17 கோரிக்கைகள் தொடர்பாக [illegible] நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி இணக்கம் கண்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலேயே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## தையற் பயிற்சி

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் தையற்பயிற்சி நிலையம் ஒன்றைவிரைவில் திறந்து வைக்க நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சுமார் முப்பது பேருக்கு ஒரே தடவையில் தையல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (இ-111)

கைதடிப் பகுதியில்

# கசிப்பு விற்பனையை நிறுத்துவதற்கு முயற்சி

கைதடி மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் கசிப்பு விற்பனையை நிறுத்தும் முயற்சியில் கைதடி சரஸ்வதி சனசமூகநிலைய நிர்வாகிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

கசிப்பு விற்பனையாளர்களை சன சமூக நிலையத்துக்கு நேரில் அழைத்து கசிப்பினால் ஏற்படும் தீமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. நிலைய நிர்வாகிகளின் கருத்தினை ஏற்றுக்கொண்ட விற்பனையாளர்கள் மார்ச் 10 ஆம் திகதியிலிருந்து கசிப்பு விற்பனையை நிறுத்துவதாக வாக்குறுதியளித்தனர்.

கசிப்பு பாவனையாளர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தலொன்றை நிலைய நிர்வாகிகள் வழங்கியுள்ளனர்.

மேலும் கைதடி கிராமப் பகுதிக்கு உட்பட்ட அனைத்து சனசமூகநிலையங்களுக்கும் கசிப்பு உற்பத்தி விற்பனையை நிறுத்த உதவுமாறு இந்த நிலைய நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதடி பகுதியில் அண்மைக் காலமாக கசிப்பு பாவனையாளரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதுடன் இதனால் பலர் நிரந்தர நோயாளர்களாகவும் மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி சனசமூக நிலையம் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது, (இ-5)

## மாசி மகம் தீர்த்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 11 தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான மாசிமக இலட்ச்சார்ச்சனை முடிவடைந்து மாசிமகப் பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

இன்று காலை 6.00 மணியாளவில் உஷத் காலப் பூசையுடன் விழா ஆரம்பமாகும். 6.30 மணியளவில் மாசிமகத் தீர்த்தம் ஆலயத் தீர்த்தக் கேணியான துர்க்கா புஷ்கரணியில் நடைபெறும். அடியார்களின் புனித நீராடுதலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## வீடு திருத்த சிமெந்து

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேதமுற்ற வீடுகளைத் திருத்துவதற்காக ஒரு தொகுதி சிமெந்து வேலணை பிரதேசசெயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களின் வீடுகளைத் திருத்துவதற்கு இந்த சிமெந்து இலவசமாக வழங்கப்படும். (இ-111)


உ

## வில்லூன்றி

வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

## திருக்குடமுழுக்கு விழா

(மகா கும்பாபிஷேகம்)

18 – 03 – 98 புதன்கிழமை

முற்பகல் 9-51க்கும் 11–34க்குமிடையே திருக்குடமுழுக்கு நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

15 - 03 - 98 ஞாயிற்றுக்கிழமை
கர்மாரம்பம், தொடர்ந்து தினமும் யாக பூசைகள்.

18 - 03 - 98 புதன்கிழமை
காலை 9–51: இராஜகோபுரம், விமானங்கள் திருக்குட முழுக்கு
மு. ப. 11-00: மூலமூர்த்தி திருக்குட முழுக்கு
மத்தி 12–00: மகாபிஷேகம்
பி. ப. 3–00: வசந்தமண்டபப் பூசை, பூந்தண்டிகை உற்சவம்

— தர்ம பரிபாலனசபை

வில்லூன்றி.

(53964)



## A/L 97

(மீட்டல் வினா விடை)

DAY CLASSES

(சகல பாடங்களும் நடைபெறுகின்றன.)

ஆரம்பமாகிவிட்டன

புதியஉயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(53976)



## திருமதி பண்டிதர் பொன். பாக்கியம்

அவர்களின்

## மணி விழா



சிவத்தமிழ் மணி பண்டிதை

**பொன். பாக்கியம் அவர்கள்**

இவரின் சைவத் தமிழ்ச் சேவைகளைப் பாராட்டி வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தார் 12 – 03 - 98 வியாழன் காலை 9-30 மணி தொடக்கம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் மணி விழா நடத்துகின்றனர்.

தலைவர் பண்டிதர் ப. இராசகுரு
மணி விழா மலர்வெளியீட்டுரை
கலாநிதி க. சிவலிங்கராசா
திருமதி நாச்சியார் செல்வநாயகம் (M.A)
பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்
திரு. செ. பத்மநாதன் (B. Sc),
பண்டிதர் அ. ஆறுமுகம்,
திரு. கா.சந்திரபாலன்(B.A) ,திரு.அ.பஞ்சாட்சரம்
திரு. கா. சந்திரராசா (பிரதேச செயலர்),
ந. சிவசண்முகமூர்த்தி (B. A),ஆ.வ. கணேசலிங்கம்
(சங்கானைக் கல்விக்கோட்டம்)

முதலானபலர் வாழ்த்துரை பாராட்டுரை வழங்குவர். அனைவரும் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

(53946)



UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works or from Multi Purpose Co-operative Socities for the "Repairs / Maintenance to Anandakumaraswamy Hall Complex"

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 19 - 03 - 1998 on producing Registration book and cash payment of the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 10, 000/-
2. Non-refundable deposit - Rs. 300/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's office, University of Jaffna on or before 31-03-98 at 10. 00 a. m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

Dr. K. Kunarasa
Registrar
University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/3083)



## நூல் அறிமுக அரங்கு

நூல்:- யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு விமர்சனக் கட்டுரைகள்

ஆசிரியர்:– கந்தையா ஸ்ரீகணேசன்
ஆங்கில விரிவுரையாளர்
(யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்)

காலம்;- **12 - 03 - 1998** முற்பகல் 9 – 30 மணி

இடம்:- இணுவில் மத்திய கல்லூரி
ஆரம்ப பிரிவு மண்டபம்

இணுவில் கலை இலக்கிய வட்டம்,
தெஸ்பியன் கலை வட்டம்

(53972)



## அரசாங்க அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## தளபாடம் வழங்கல்

சுகாதாரத் திணைக்களத்திற்கு மரத்தளபாடங்கள், இரும்புத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 27–03–98 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 1.30 மணிக்கு திறக்கப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிக்கப்படார்த விண்ணப்பப் பணமாக 25/– ரூபாவும், மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமாக 1000/– ரூபாவும் செலுத்தி 16—03—98 முதல் எனது பணிமனையில் பெற்றுக் கொள்வதுடன் மாதிரிகளையும் பார்வையிடலாம். விண்ணப்பப் படிவங்கள் 26—03—98 பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும். இக் கேள்விப் பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாத காலத்திற்குள் குறிப்பிட்ட தளபாடங்களை தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும். தளபாடங்கள் யாவும் வேப்ப மரத்தினால் செய்யப்பட்டு இரு தடவை வாணிஸ் பூசப் படல் வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப் படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,**
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூண்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(–சி3074)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான கைெயழுத்து வேட்டை

## கண்டியில் ஆரம்பமானது

கண்டி, மார்ச் 11

விடுதலைப் புலிகளைத் தடைசெய்து அவர்களுக்கு வழங்கும் உதவிகளைநிறுத்துமாறு வெளிநாடுகளைக் கோரும் மனுவில் கையொப்பங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை கடந்த 7 ஆம் திகதி கண்டியில் ஆரம்பமானது.

அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்ட கையொப்பம்பெறும் நடவடிக்கையின் போது முதல் 3 மணித்தியாலங்களுக்குள் 20 ஆயிரம் பேர் கையொப்பமிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானத்தை விரும்பும் இலங்கைப் பிரஜைகள் என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட கையொப்பம் பெறும் இந்த நடவடிக்கை நாடளாவிய முறையில் மேற்கொள்ளப்பட உள்ளது.

(இ–10)

## கொழும்பு மாடி வீடுகளில்

## வாகனத்தின் சில்லுகளை கழற்றும் திருடர்கள்!

கொழும்பு, மார்ச் 11

கொழும்பில் பல பகுதிகளில் புதுமையான திருட்டு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்மாடி வீடுகளில் குடியிருப்போர் தமது மோட்டார் வாகனங்களை கீழ்த்தளத்தில் நிறுத்தி விட்டு தமது மாடி வீடுகளில் தங்கி விடுவார்கள். அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் சமயமான இரவு 11 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரையிலான காலப்பகுதியில் கீழ்த்தளத்தில் தரித்து நிற்கும் மோட்டார் வாகனங்களின் சக்கரங்கள் திருடர் கோஷ்டியினரால் கழற்றி எடுத்துச் செல்லப் படுகின்றனவாம்.

நாரஹேன்பிட்டி, அன்ரசன் தொடர்மாடியில் இப்படியான ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இங்கு தரித்து நின்ற வாகனம் ஒன்றில் இருந்து நான்கு சில்லுகளையும் திருடர்கள் கழற்றிச் சென்றுவிட்டனர்.

(இ-9)

## யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட அனுமதி

மருத்துவ பீடத்துக்கு மேலும் அனுமதி; யாழ், பல்கலைக்கழகமே தடை என்ற செய்தியை சஞ்சீவி (21-2-98) இதழில் வாசித்து விசனமும் அதிர்ச்சியும் அடைந்த பெற்றோர்களில் நானும் ஒருவன்.

இது விடயமாக, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பல்கலைக்கழகங்களில் மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1997–1998 அனுமதி சம்பந்தமான கையேட்டின் பிரகாரம் 125 வெற்றிடங்கள் உண்டு என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் 66 இடங்கள் மாத்திரமே நிரப்பப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது, இதில் வெற்றிடமாக உள்ள மிகுதி 59இல் எமது தமிழ் கல்விமான்களினதும் அரசியல்வாதிகளினதும் தலையீட்டினால் 25 வெற்றிடங்களை நிரப்பப் போவதாகவும் பேராசிரியர்கள் பற்றாக்குறையையும் மருத்துவ ஆய்வு கூட வசதியின்மையையும் காரணம் காட்டி மிகுதி 34 வெற்றிடங்கள் நிரப்பப்படமாட்டாது என்றும் அறியப்படுகிறது.

இது விடயமாக அரசாங்கமும் மானிய ஆணைக்குழுவும் பச்சை விளக்கு காட்டிய போதிலும் எமது கல்விமான்களின் அசமந்தபோக்கு ஒரு வியப்பாகவே இருக்கின்றது. தமிழ்பேசும்மாணவர்களுக்குமருத்துவக்கல்விபெறுவதற்குவசதியான ஒரே ஒரு பல்கலைக்கழகம் யாழ். பல்கலைக்கழகமே ஆகும். எமது தமிழ்ப் பிரதேசத்தில் வாழும் உயர்கல்விக்கு தகுதியுடைய மாணவர்களுக்கு, சகல வசதிகளையும் அரசுடன் போராடியாவது பெறுவதே எமது கல்விமான்கள் தமிழ் மக்களுக்குச்செய்யும் சிறந்த சேவையாக அமையும். தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகஸ்தர்கள் உதவியும் ஊக்கமும் அளித்து அவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்றும் இதற்கு எவரும் தடையாக இருக்காமல் சகல வளங்களையும் குறிப்பாக பேராசிரியர் பற்றாக்குறை, ஆய்வு கூடவசதியின்மை என்பவற்றை அரசுடன் தொடர்பு கொண்டு நீக்கலாம் என்று, கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் ஏனைய கல்விமான்களும் கருத்து வழங்கியுள்ளனர்.

மேலும் வேறு மாவட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி புகட்டும் தமிழர்களும் தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் குன்றக் கூடாதென்பதற்காக எல்லா ஒத்துழைப்பும் நல்குவர் என நம்புகிறோம்.

யாழ் பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாக உள்ள 34 இடங்களையும் வேறு காரணம் கூறி நிரப்பாதுவிடின் பாதிப்படைபவர்கள் தமிழ் மாணவர்களே. இந்த 34 இடங்களையும் மருத்துவ கல்வியுள்ள வேறு பல்கலைக்கழகங்களில் நிரப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவிடும்.

இது விடயமாக எமது இன்றைய அரசியல் தலைவர்கள் எடுத்திருக்கும் நடவடிக்கையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இவ்விடயமாக ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சுக்கும் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தருக்கும், மருத்துவபீடாதிபதிக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளேன்.

வடக்கு - கிழக்கில் பின்தங்கிய மாவட்டங்களில் ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி 244 ஆகும், யாழ்.மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகக் கருதிய பொழுதும் வெட்டுப் புள்ளி 275 ஆக அறிவிக்கப்பட்டதே சகல கல்வி வசதிகள் அற்ற சூழ்நிலையில் கல்வி கற்ற மாணவர்களுக்குப் பேரிழப்பாகும். ஆகவே யாழ். மாவட்டத்தை உண்மையாகப் பின்தங்கிய மாவட்டமாகக் கருத்தில் கொண்டு வெட்டுப் புள்ளியைக் குறைத்து தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தே இந்த 34 வெற்றிடங்களையும் நிரப்ப ஏதுவாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரை நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சு. தர்மலிங்கம்

உப்புக்கேணி, சாவகச்சேரி.

## முறைசாரா கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். கல்வி வலயம் ஒன்றின் முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் முறைசாராக்கல்விக் கண்காட்சி இன்று புதன் முற்பகல் 10.00 மணியளவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. மகாலிங்கம் மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் திருமதி ச. சிவச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கண்காட்சி மதிப்பீட்டாளராக வலயம் ஒன்றின் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம் கலந்து கொள்வார்.

(இ -7)

## அதிபர் நியமனம்

அச்சுவேலி, மார்ச் 11

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் புதிய அதிபராக சி. தங்கவேல் நியமனம் பெற்றுள்ளார். இவர் வித்தியாலய உப அதிபராகக் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ -11- 9)

## புனரமைப்பு

கொழும்புத்துறை, மார்ச் 11

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் இராஜகோபுரம் புனரமைப்புச் செய்யப்பட்டுத் தற்போது வர்ணம் தீட்டும் பணிகளுக்கான ஆயத்தங்கள் ஆலய பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ–30)

## படைமுகாம் மீது ஷெல் வீச்சு

வவுனியா, மார்ச் 11

வவுனியா செட்டிகுளம்—மன்னார் வீதியில் ஆண்டியார் புளியங்குளத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ஞாயிற்றுக்கிழமை இரவு ஷெல் தாக்குதல் நடத்தினர். இதில் இரு படையினர் காயமடைந்தனர்.

படையினர் புலிகள் மீது திருப்பித் தாக்கியதில் புலிகள் தரப்பில் ஒருவர் பலியானதாகவும் அவரது சடலத்தைப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் வவு[illegible] ரங்கள் தெரிவித்தன.

(ஐ–146)

இன்று முதல் ஆரம்பம்
ப்ரியா வெண்திரையில்
(மருதடி, பருத்தித்துறை)

ரஜனி, நதியா, ராதா
நடித்த

ராஜாதி ராஜா

தினசரி
10.30 — 2.30
இரு காட்சிகள்

ப்ரியா வீடியோ
மந்திகை

(53968)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 18 — 04 — 1942

மறைவு: 14 — 02 — 1995

### தியாகராசா அரசரத்தினம்

(இ. போ. ச. சாரதி, காரைநகர்.)

திதி: 11 — 03 — 98

அன்புடனேயெமை அரவணைத்து
நற்பண்புதனை நலமுடனே போதித்து
நன்றுடனே நானிலத்தில் நாம் வாழ
ஊன்று கோலாய் மாறிஎமையுயர்த்திய தெய்வமே!
நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள் முடிந்தாலும்
எம் நெஞ்சில் மூண்ட உங்கள் நினைவுகள் என்றும்
அணையாது.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள். மைத்துனர்மார்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(53953)

## 31 ஆம் நாள்நீங்காத நினைவலைகள்



மலர்வு: 13 — 11 — 1976

உதிர்வு: 09 — 02 — 1998

### றெக்ஸ் எடின் சாமினி இவாஞ்சலிஸ்ரா

ஓடி மறைந்தது மூன்று பத்து நாள்கள்
ஓயாமல் உம் திரு நாமம் ஒலிக்கும்
பண்பான கணவனை
பாசமிகு பால் மணம் மாறாத பாலர்களை
பாதி வழியிலே விட்டுப் பறந்தோடி விட்டாய்!
வாயார அம்மாவென்று அழைத்திட நீங்களில்லை
இல்லறத்தில் நீர் இணைந்து ஐந்து ஆண்டுகள்
ஆகவில்லை!
மனைவியை இழந்து கணவன் கலங்குகிறான்;
தாயைப் பிரிந்து பிள்ளைகள் தவிக்கின்றனர்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மாமா, மாமி, மைத்துனர்கள்.

இல. 118, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(53969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Chest of Drawers படிக்கும் மேசை, கட்டில்கள், கதிரைகளுடன், சாப்பாட்டுமேசை, சோகேஸ், செற்றி, ஈசிச் செயர், தையல்மெசின், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 28, யாழ். வீதி யாழ்ப்பாணம். [53960]

அழகிய வெள்ளை பிறவுண் கலந்த 2 வயது பொமனேறியன் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. G. செல்வராசா, 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். [53961]

## திருத்த வேண்டுமா?

ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc. Ceylon Dip In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். ]சி/3069]

## தவறிவிட்டது

கந்தையா யோகநாதன் கச்சாய்தெற்கு கொடிகாமம் என்னும் பெயர் முகவரியுடைய விசேட அடையாள அட்டை, கைதடிக்கும் கச்சாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கண்டி றோட், பெரியஅரசடி சாவகச்சேரி, தம்பையா கடையில் ஒப்படைக்கவும். [53963]

## SPOKEN ENGLISH

BY

Britto

ஆரம்பம்: 14-02-98

(2 மணி)

புதியஉயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ். (53975)

## பாலர் ஆசிரியராக

மேற்படி பயிற்சி பெற க. பொ. த. சாதாரணதர தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (53921)

## தேவை

சகல பிஸ்கற் வேலைகளும் தெரிந்த பிஸ்கற் பாஸ் தேவை. 15–3–98-க்கு முன் தினமும் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நேரில் வரவும். (தேவைப்படின் தங்குமிட வசதியும்உணவும் வழங்கப்படும்)

**றொலெக்ஸ் பேக் மாட்**

இல. 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (53974)

## மீன்தூள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் நாட்பட்ட மீன் தூள்விற்பனைக்குண்டு. இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது களஞ்சியத்தில் மீன் தூளைப் பார்வையிட்டு 14 - 03 – 98 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-3075)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி சிவபாக்கியம் கெந்தீஸ்வரன்

அவர்களின் அன்புக் கணவர்

**ஆறுமுகம் கெந்தீஸ்வரன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/ உடுவில்
முருகமூர்த்தி வித்தியாசாலை
சுன்னாகம்.

(சி/3076)

## 45 ஆம் நாள் வீட்டுக்கிரியை



தோற்றம்: 08 — 12 — 1937

மறைவு: 26 — 01 — 1998

**ஆறுமுகம் கெந்தீஸ்வரன்**

26 – 01 – 98 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ் வேளையில், அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து ஆறுதல் கூறி அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இன்று (11 - 03 – 98) புதன்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

உடுவில். (53954)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி பரிமளம் ஜோனா**

(காரைநகர்)

திதி: 11—03—1998

''கர்த்தர் மேல் உன் பாரத்தை வை; அவர் உன்னை ஆதரிப்பார்.'' (சங். 55–2.)

ஞாபக ஆராதனை: 12—03—1998 (வியாழன்)

இடம்: இணுவில் தேவாலயம்

நேரம்: 3-30 மணி (S. L. T.)

யாவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

ஜோ. ஐ. ஜெயரத்தினம்
இணுவில். (53934)

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

**25 ஆம் ஆண்டு** — **முதலாம் ஆண்டு**





அமரர்
குட்டிப்பிள்ளை யோன் ஆறுமுகம்
(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

அன்னையின் அணைப்பில்: 01 — 04 — 1909
ஆண்டவன் அழைப்பில்: 16 — 06 — 1973

திருமதி
சூசன் இரத்தினம் ஆறுமுகம்

அன்னையின் அணைப்பில்: 25 — 03 — 1911
ஆண்டவன் அழைப்பில்: 11 — 03 — 1997

''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்;
கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.''

என்றும் உங்கள் ஆசியுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, ஆம் கட்டை,
உடுப்பிட்டி. (53956)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 19 — 12 — 1945

மறைவு: 06 — 03 — 1993

**அமரர் வ. குலநாயகம்**

திதி:-11—03— 1998

அன்பு அப்பாவே! நீங்கள் இவ்வுலகை விட்டு மறைந்து இன்றுடன் ஐந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பு முகம் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கும்! உங்கள் அன்பும், பாசமும், கருணையும், கொடையும் என்றும் அழியாத நினைவலைகளாய் எங்கள் மனதை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

தகவல்:
கு. சிவானந்தன்,
வர்த்தக திணைக்களம்.

சிந்தியா ஜுவல்லறி
158, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி இ. குலநாயகம்
465/16 A, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (53962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொண்டாவின் புதிய யோசனை

வடக்கின் ஆட்சிப் பொறுப்பை பத்து வருடங்களுக்கு விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனிடம் ஒப்டைக்கத்தாம் முன் வந்ததாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த ''பழைய விஷயம்'' தென்னிலங்கையில் பெரும் சர்ச்சைக்குரியதாகிச் சூடு பிடித்திருந்தமை தெரிந்ததே.

அந்தச் சூடு தணிவதற்குள் தெற்கு அரசியல் வாதிகளுக்கு ஒவ்வாமையை — அலர்ஜியை — உண்டாக்கும் யோசனை ஒன்றை அமைச்சர் தொண்டமான் வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை வடக்கு — கிழக்கு ஆளுநராக நியமித்து, ஜனாதிபதிக்கு உள்ளது போன்ற அதிக .அதிகாரங்களை வழங்கினால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்— என்பதே தொண்டா வானொலிச் செவ்வி ஒன்றின் போது வெளியிட்டிருக்கும் அந்தப் புதிய யோசனை.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில், அந்த அரசின் அமைச்சராக இருந்த போதும், வடக்கு — கிழக்கின் ஆட்சிப் பொறுப்பை ஐந்து வருடங்களுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டு, பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக் கொண்டு வரலாம் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் அந்த யோசனை கணக்கில் எடுக்கப்படவில்லை.

அமைச்சர் தொண்டமானின் புதிய யோசனையையாவது இன்றைய அரசு கவனத்தில் எடுக்குமா என்பதும் சந்தேகமே. அரசாங்கத் தலைவர்கள் இது குறித்து சிரத்தை கொள்கிறார்களோ இல்லையோ, தென்னிலங்கையில் அரசியல் சர்ச்சை சூடு பறக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

எதிர்க் கட்சியினர் பௌத்த மதகுருமார், பேரினவாதிகள் ஒன்று சேர்வர். இந்தப் புதிய யோசனையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ''கூத்தாடு''வார்கள். கண்டன அறிக்கைகள், கூட்டங்கள், பேரணிகள் என்று பலவும் விரியும்.

அமைச்சர் தொண்டாவை அமைச்சரவையிலிருந்து விலக்குமாறு கோரி தனியான இயக்கம் ஒன்று நடத்தப்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

அது எப்படியோ —

தமிழர் தாயகமான வடக்கு — கிழக்கில் நிறை அதிகாரமுள்ள தன்னாட்சி அதிகாரம்கொண்ட அரசை அமைக்க வழி செய்யாத எந்தத் தீர்வையும் தமிழர்கள் ஏற்க மாட்டார்கள் என்பதனை தெற்கு அரசியல்வாதிகள் உணரவேண்டும்.

அந்த ஆகக்குறைந்த அடிப்படைக்குக் குறைவான அரை வேக்காட்டுப் பண்டம் எதனையும் தமிழர் வாய்க்குள் திணிக்க அரசு முயலக் கூடாது என்பதே தமிழர்களின அசையா நிலையும் விருப்பமுமாகும். தெற்கில் உணர்ந்து கொள்வார்களா? எப்போது...? அப்போது தான் இன்ப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழி திறக்கும்.

# மகத்துவம் மிக்க மாசிமகம்; புனித நீராடி விரதமிருங்கள்

அரிதினும் அரிதாம் மானுடப் பிறவியைப் பெற்றுள்ள யாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுதலே எம் தலையாய நோக்கமாகக் கொளல் வேண்டும். மண்ணிலே நல்லவண்ணம் வாழ வழிவகுப்பவை இந்துமக்களாகிய எம்மிடையே பண்டு தொட்டுப் பேணப்பட்டுவந்த மரபொழுக்கங்களாகும்.

விரத நியமங்களும் ஆசார வழக்குகளும் எம்மை நல்லாற்றுப்படுத்தவல்லன. இவ்வகையிலே ''மாசிமகம்'' என்னும் சிறப்பு மிகு விரதம் மாசி மாதத்தின் விரதங்களுள் சிறந்ததோர் விரதமாகும். இதனை அனுஷ்டித்தல் இன்று அருகி வருகிறது ஏனெனில் இதன் மகத்துவத்தை நாம் சரிவர அறியாமையே யாகும்.

இன்று எம்மிடையே பெரிதும் பேசப்பட்டு வரும் கந்த புராணத்தில் மாசி மக நன்னாளின் சிறப்பு வெகுவாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. கந்த புராணத்தின் கலாசாரமே நாம் கைக்கொள்ளும் கலாசாரமாகும்.

இன்னபல் வகைத்தாய் நீடும்
இரும்புனல் யமுனை யின்கண்
மன்னிய நெறிசேர் மாசி
மகப்புன லாட வேண்டி
அந்நிலத் தவர்கள் யாரும்
அடைந்தனர் உலக மெல்லாந்
தன்னிகர் இன்றி யாளுந்
தக்கன் இத் தன்மை
தேர்ந்தான்

என்று மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திர புண்ணிய காலத்தின் சிறப்பினை தக்கன் உணர்ந்து யமுனை நதியில் புனித நீராடினான் என்று கந்தபுராண தட்ச காண்டத்தில் பேசப்படுகிறது. சைவம் வளர்த்த சமய குரவர்களுள் முதல்வராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும்.

''மடலார்ந்த தெங்கின்
மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
கபாலீச்சர மமர்ந்தான்
அடலா னேறூரும்
அடிகள் அடி பரவி
நடமாடல் காணாதே
போதியோ பூம்பாவாய்''

என்ற பாடல் மூலம் மாசி மக நன்னாளின்சிறப்பினைப் போற்றியுள்ளார்.

ஒரு சமயம் வருண பகவான் பிரம்மஹத்தி தோஷம் பீடித்து சமுத்திரத்தினுள் அமிழ்த்தப்பட்டிருந்தான். தேவர்கள் சிவபிரானை நோக்கி பிரார்த்தனை செய்ததன் பயனாய் சிவபிரான் வருண பகவானுக்கு இன்னருள் புரிந்து அவனைப் பீடித்திருந்த தோஷத்தினை நீக்கியருளினார். அப்போது வருணபகவான் ''எனதுதோஷம் நீங்கிய இம்மாசிமக நன்னாளில் சமுத்திரத்திலும் புண்ணிய தீர்த்தங்களிலும் புனிதநீராடி விரதம் அனுட்டிப்போர் கன்ம வினைகள் நீங்கப் பெற்று இகபர இன்பங்களை அடைய வேண்டும்'' என்று சிவபிரானிடம் வேண்டுதல் செய்தான்,

அன்று தொட்டு மாசி மகத்தீர்த்தம் சமுத்திரங்களிலும் புனிதநதிகளிலும் நீராடி விரதமனுஷ்டிக்கும் புனித தினமாக இந்துப் பெருமக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

### அன்னை பிறந்த தினம்

மாசிமக நன்னாள் இன்னோர் வகையில் மிக்கமேம்பட்டதாகிறது. அகிலமெல்லாம் புரக்கும் அன்னை பராசக்தி தக்கனின் திருமகளாய் அவதாரம் செய்த தினம் மாசிமக நன்னாளாகும், அன்னை உமையவள் தக்கனின் திருமகளாய் அவதரித்தமை அளப்பருங் கருணையின் விளைவாய் நிகழ்ந்ததோர் நிகழ்வாகும்.

தக்கன் அளவிறந்த தவம் செய்ததன் பயனாய் அவன் வேண்டுதலுக்கு அருள் புரிந்து தம்பிரிவிலாப் பெரும் சக்தியை அவன் மகவாக வளர அருள்புரிந்த புண்ணியன் அந்த திவ்விய மேலாம் பரம்பொருள். தக்கன் மாசி மகத்தின் மகத்துவத்தினை உணர்ந்து புனித ஜமுனை நதியில் நீராடி மீண்ட காலை அங்கே ஓர் அழகிய தாமரை மலர் மீது அன்னை பராசக்தி சிவனின் சித்தப்படி வலம்புரிச் சங்காகவீற்றிருந்தாள்.

அதனைக் கண்ணுற்ற தக்கன் மகிழ்வெய்தி அவ்வலம்புரிச் சங்கைக் கையில்எடுத்த வேளை அழகிய பெண் மகவாய்த் தோன்றியதைக் கண்டு வியந்து தன்மனையாள் கரத்தில் ஒப்படைத்துக் களிப்புற்றான். இவ்வண்ணம் அன்னை பராசக்தியை அரும் புதல்வியாக தக்கன் பெற்ற நன்னாள் மாசி மகத் திருநாளாகும்,

மற்றுமோர் வகையில் மாசிமகத்தின் மகத்துவம் வீரசைவ மக்களிடையே பெரிதும் போற்றப்படுகிறது. வீரசைவத்தை ஸ்தாபனம் செய்த மூலாசாரியர்கள் ஐவருள் முதல்வரான ஜகத்குரு ஸ்ரீமத இரேணுகா சிவாச்சாரியார் அவர்கள் அவர்கள் இரம்பாபுரி சோமேஸ்வரலிங்கத்தில் இலிங்கோற்பவித்த நாள் இந்த நன்னாளாகும். இதனால் வீரசைவப் பெருமக்கள் இப் புனித தினத்தினை தம் குருசுவாமிகளின் ஜயந்தி தினமாகப் பெரிதும் போற்றி அனுஷ்டித்துவருகின்றனர்.

இம் மாசி மகத்திருநாளில் மற்றோர் சிறப்பம்சம் உள்ளது, பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் மகம் ''மகாமகம்'' என்று விஷேடமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினத்தில் இந்தியாவில் பிரசித்தபெற்று விளங்கும் கும்பகோணம் மகாமகக் குளத்தில் தீர்த்தமாடுவதால் புண்ணிய நதிகள் யாவற்றிலும் தீர்த்தமாடிப் பலன் கிட்டுமென்று புராணங்களில் கூறப்படுகின்றது.

இப்புனித தினத்தில்சைவப் பெருமக்களாகிய நாம் அனைவரும் மாசிமகப்புனித தீர்த்தமாடி விரதம் அனுஷ்டித்து எல்லாம் வல்ல சிவபரம் பொருளின் கருணையைப் பெற்றுய்ய வேண்டும்.

★

—வ. குமாரசாமிஐயர்

**உதய வாக்கு**

வெற்றி, தோல்வி இவ்விரண்டையும் சமமாக ஏற்று கற்றறிவில்லா மாந்தர் மத்தியில் உட்பண்பைக் காத்து எளியோர் மீது அன்பு கொண்டு கற்றறிவோடு வாழ்ந்தால் மட்டுமே நீ மைந்தன் ஆவாய்.

- கிப்ளிங்

## தவக்கால சிந்தனை

(15ஆம் நாள்)

எம் வாழ்வில்நாம் எதிர் கொண்ட சோதனைகள் பலவாக இருக்கலாம். அவை வரும்போது அவற்றில் இருந்து தப்பிவிடப் பல வழிகளில் முயன்றோம். அந்தச் சோதனைகளை எதிர்கொள்ளும் போது துவண்டோம். மற்றவரைத் தூஷித்தோம், தாங்கமுடியாத கொடுமை எனக் குமுறினோம்.

ஆனால் தனது சாவுக்கான அழைப்பு என்று தெரிந்தும் இறைசித்தம் என ஏற்றுக்கொண்டு, தன் பயணத்தைத் தொடர்ந்த இறைமகனின் மக்கள் என கூறிவாழும் நாம், எமது சோதனைகளில் கலங்காது இவைஇறைசித்தம் என ஏற்றுக் கொண்ட நாள்கள் உண்டா? எமது மனதில் எழும் விசுவாசத் தளர்ச்சியால நம்பிக்கையின்மையால் நாம் தவறிய காலங்களை மீட்டுக் கொள்வோமா? அந்தத் துன்பத்திலும் எம்மோடு இறைவன் இருந்தாரே என மீண்டும் மீண்டும் மனதால் சிந்தித்து ,தவ முயற்சியில் எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.

-யோசப்பாலா-

# யாழ். மாவட்டப் பெண்கள் கைத்தொழில்களை ஆரம்பிக்க வசதியாக பல துறைகளில் பயிற்சி

## கைத்தொழில் அபிவிருத்திச் சபை முன்முயற்சி; பத்து நாள்கள் நடந்த பட்டறையின் விளைவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மகளிர்தொழில் முயற்சி அபிவிருத்திப் பட்டறை புதிய தொழில்துறைகளை தோற்றுவிப்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

பத்து நாள்கள்தொடர்ந்து இடம்பெற்ற இந்தத் தொழில் பட்டறையில் யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் 60பெண் பயிற்சியாளர்கள் பங்குபற்றினார்கள். இவர்களில் பலர் இங்கு பெற்ற பயிற்சியினை

செய்தி மடல்

அடிப்படையாக வைத்து, தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த கைத்தொழில் அபிவிருத்திச்சபை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்களில் தோல் பொருள் சம்பந்தமான பயிற்[illegible] களைஉற்புத்தியில்ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். இந்தப் பயிற்சியாளர்களில் பலர் வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்களுக்கான மூலப் பொருள்களையும் உபகரணங்களையும் கொழும்பிலிருந்து கைத்தொழில் அபிவிருத்திச் சபை பெற்றுக் கொடுக்கவுள்ளது செருப்பு, தோற்பை உட்பட பல தோற்பொருள்களை இவர்கள் உற்பத்தி செய்யவுள்ளனர்.

இதே போன்று மணிக்கூடு திருத்தும் பயிற்சியைப் பெற்றவர்களில் ஒன்பது பெண்கள் இந்தத் தொழில் துறையில் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கு இத்தொழில் முயற்சிக்கென கிறிஸ்துவுக்கான இளைஞர் சங்கம் [illegible] 5 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திச்சபை இவர்களுக்கான உபகரணங்களை வழங்கும்.

### நிதி உதவி

உணவுப்பொருள் தயாரித்தல் மற்றும் பதனிடுதல் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்களில் பதினெட்டுப் பெண்கள் உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு ஜாம், ஜோகட், பப்படம், ''மிக்சர்'' உட்பட பல உணவுப் பொருள்களைத் தயாரித்துச் சந்தையில் விடவுள்ளனர். இவர்களில் ஒரு பெண்மணி மந்திகையில் ஒரு விற்பனை நிலையத்தை ஆரம்பித்துள்ளார். இவ்வாறு தாம் பெற்ற பயிற்சியினை வெறும் புத்

கேசரி

தகக் கல்வியாக மட்டும் வைத்திருக்காமல் செயல் திட்டங்களில் ஈடுபட்டிருப்பது வரவேற்கக் கூடியதே. இவர்களுக்கெல்லாம் பக்கத் துணையாக, நம்பிக்கைக்கரமாக கைத்தொழில் அபிவிருத்திச்சபை இருக்கிறது. சிறந்த ஒரு வழிகாட்டியாக இருப்பதுடன் மட்டுமன்றி காலத்திற்கு ஏற்ப தொழில்நுட்ப ஆலோசனைகள், பயிற்சிகள் போன்றவற்றை வழங்குவதற்கும் வங்கிகள் ஊடாக நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச்சபை திட்டமிட்டுள்ளது.

நீண்டகால யுத்தத்தினால் சீரழிந்து துன்பமும், துயரமும் குடி கொண்டிருந்த

( 9ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

மாசி 28

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தசி

முற்பகல்: 8–32 வரை

நட்சத்திரம்: பூரம்

காலை 6.22 வரை

பூரணைவிரதம்

சுபநேரம்: 7.53 – 9. 23

ராகு காலம்: 1.53 –3.23

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே இலக்கத்துடன் வந்த 2 வாகனங்கள் சிக்கின!

கொழும்பு, மார்ச் 11

ஒரே இலக்கத்துடன் வந்த இரு வாகனங்கள் வீதித் தடைச் சோதனையின் போது சிக்கிய சம்பவம் பேராதனையில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பு-கண்டி நெடுஞ்சாலையில் கண்டியை நோக்கிச் சென்ற இருவாகனங்கள் கடந்த 7 ஆம் திகதி பேராதனையில் நிறுத்தப்பட்டன.

அப்போது இரு வாகனங்களின் இலக்கங்களும் ஒன்றாக இருக்கவே அதில் போலியான இலக்கம் எது என்பதைக் கண்டறிய இரு வாகனங்களும் பேராதனைப் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதில் ஒருவாகனம் தல்துவவில் இருந்து சிவனொளி பாதத்துக்கும், மற்ற வாகனம் வத்தளையில் இருந்து திருமணச் சடங்கில் கலந்து கொள்ள கண்டிக்கும் சென்று கொண்டிருந்ததாக விசாரணையின் போது தெரிவிக்கப் பட்டது.

மேலும் வத்தளையில் இருந்து சென்ற வாகனம் மோட்டார் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப் படாதது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அந்த வாகனத்திற்கு காப்புறுதியும் செய்யப்படவில்லை என்பதும் தெரிய வந்தது.

விசாரணையின் பின்னர் சிவனொளிபாதத்துக்குச் சென்று கொண்டிருந்த வாகனம் விடுவிக்கப்பட்டது. வத்தளையில் இருந்து சென்ற வானில் பிரயாணிகளான முஸ்லிம்கள் மூவரும் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் வத்தளையிலிருந்து சென்ற வானும் அதன் சாரதியும்(மாணிக்கம் விஜயநாதன்) பேராதனைப் பொலீசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். (இ-10)


உ

துவாளி வீரகத்தி விநாயகர் ஆலயம்

இமையாணன், உடுப்பிட்டி.

**மஹோற்சவ தேர், தீர்த்தம்**

நிகழும் ஈசுர வருடம் மாசி **28** ஆம் நாள் (12 - 03 - 98) வியாழன் காலை 9.00 மணிக்கு இரதோற்சவமும், மாசி 29 ஆம் நாள் (13-03-98) வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்,

அடியார்கள் அனைவரும் உற்சவங்களில் கலந்து விநாயகரின் அருள் பெறுக.

சுபம்

(53978) உற்சவ உபயகாரர்கள்.



கொக்குவில் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

**ஆண்டுப் பொதுக்கூட்டம்**

**அறிவித்தல்**

மேற்படி பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் **29-03-1998** (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு (இலங்கை நேரம்) பிற்போடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலினை சகல அங்கத்தவர்களையும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்

பழைய மாணவர் சங்கம்

கொக்குவில் இந்துக் கல்லூரி,

கொக்குவில். (53983)



**விக்னா கல்வி நிறுவனம்**

நாளை ஆரம்பம்:

கணக்கீடு

திரு. பாலவாசன்

A/L 97 DAY CLASS

மாற்றுண்டியல்

செவ்வாய், புதன், வெள்ளி 2.00 - 3.00

வியாழன் 9.00 - 10.00

குறிப்பு: பழைய, புதிய பாடத்திட்டங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யும் வகையில் கற்பிக்கப் படும்.

(53984)



**தொழில் பயிற்சி வகுப்பு**

வானொலி பழுதுபார்த்தல்

விரிவுரைகள் ஆரம்பத்தில் இருந்து இலவசமாக **3** மாதத்தில் கற்பிக்கப்படும். செயன்முறைப் பயிற்சிக்கட்டணம் மாத்திரமே அறவிடப்படும். பயிற்சி முடிவில் திறமைக்கேற்ப சுயதொழில் ஆரம்பிக்கத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும்.

ஆரம்பம்: 23-03-1998 மாலை 3 மணிக்கு

விண்ணப்ப முடிவு திகதி: 20 - 03 - 1998

தொடர்பு:

**கிருபா போட்டோ**

கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

(53981)


# அரசின் மீதோ, சட்டங்கள் மீதோ எனக்கு நம்பிக்கை கிடையாது!

## ஜனாதிபதி கொலை முயற்சி வழக்கில் தமிழரான சந்தேக நபர் தெரிவிப்பு

களுத்துறை, மார்ச் 11

''அரசின் மீதோ நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மீதோ எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் 23 தடவைகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. ஆனால் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ரணசிங்கா நான்கு தடவைகள் மாத்திரமே நீதிமன்ற விசாரணைக்கு சமுகமளித்திருந்தார். அதன் பின்பு தொடர்ந்து வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அனுப்பியுள்ளார். அரச அதிகாரிகள் சிலரின் இத்தகைய நடவடிக்கையினாலேயே நான் இவ்வாறான நிலையிலுள்ளேன்''

மேற்கண்டவாறு ஜனாதிபதிபடுகொலை முயற்சிவழக்கின் சந்தேகநபரானசின்னத்துரை முகுந்தன் உயர்நீதி மன்றத்தில் தெரிவித்தார்.

களுத்துறை உயர்நீதி மன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப் பட்டது.

கொழும்பு உயர்நீதிமனறத்தில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்குபாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சட்டமா அதிபரின் கோரிக்கையை அடுத்து களுத்துறை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

சந்தேக நபரான முகுந்தன் களுத்துறை நீதிமன்றில் மேலும் தெரிவிக்கையில் ''எனக்குச் சிங்களம் தெரியாது. எனக்காக வாதாட இங்கு சட்டத்தரணி எவரும் கிடையாது. கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் எனக்காக ஆஜராகி இருந்தார். வழக்கு களுத்துறை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பின்பு சட்டத்தரணி எவரும் எனக்காக ஆஜராகவில்லை.

நான் கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கூட பாதுகாப்புக் காரணங்களுக்காக வழக்கு விசாரணை நாள்களில் உயர்நீதி மன்றத்திற்குஎன்னைஅழைத்துச் செல்லவில்லை.

என்னைக் கைது செய்து 3 ஆண்டுகளாகின்றன. கொழும்பு உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது எனது சட்டத்தரணியின் திறமையான வாதத்தால் எனக்குச் சாதகமான நிலைஉருவான வேளையில் சட்டமா அதிபர் எனக்கு எதிராக மேலும் 5 வழக்குகளைத் தொடுத்துள்ளார் என்றார்.

மேல் விசாரணை ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-10)

## திருமந்திர விரிவுரை

யாழ்ப்பாணம், மார்ச் 11

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்றுநடைபெற்றுவரும் திருமந்திர விரிவுரையின் இம்மாதத்துக்கான விரிவுரை நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் இந்த விரிவுரையை நிகழ்த்துவார். (இ-9)

## மாதாந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்த கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கொக்குவில் உப அலுவலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறும்.

''இன்றைய கல்வி நிலையும் பெற்றோரும்'' என்ற தலைப்பில் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சி. வேலாயுதம் கருத்துரை வழங்குவார். (ஐ)


எழுது வினைஞர்கள்

**தேவை**

க. பொ. த. (சா/ தரத்தில்) 6 பாடம் சித்தி, நல்ல எழுத்துவளம் உடையவர்கள் விரும்பத்தக்கது. **13 - 03 - 98** வெள்ளிக்கிழமை நேரில் வரவும்.

தொடர்பு:

கிருபா போட்டோ

கல்லூரி வீதி,

வட்டுக்கோட்டை.

(53982)


## யாழ்.பிரதேசசெயலர் பிரிவில் 5,459 குடும்பங்களுக்கு ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

யாழ். பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் 5 ஆயிரத்து 459குடும்பங்களுக்குஇதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 6 ஆயிரத்து 338 குடும்பங்களின் விண்ணப்பப்படிவங்கள் கொடுப்பனவுக்கென கிராம சேவகர்கள் மூலம் சிபார்சு செய்யப்பட்டு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் 5 ஆயிரத்து 459 குடும்பங்களுக்கான கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டுவிட்டதாகவும், ஏனையவர்களுக்கு கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை யாழ். பிரதேச செயலர் பிரிவில் கடந்த சில மாதங்களில் மீளக்குடியமர்ந்தோரின் கொடுப்பனவு விண்ணப்பப் படிவங்களும் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)


கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு

ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்

(காளிகோயில்)

**அறிவித்தல்**

மேற்படி ஆலயத்தில் தற்போது பாவனையில் இருக்கும் நல்ல நிலையில் உள்ள மின்சார இயந்திரம் விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் ஆலய பரிபாலனசபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பூசை நேரங்களில் பார்வையிடலாம்.

- பரிபாலன சபையினர்

(49987)



92-வது

கிறிக்கெற் பெரும் போட்டி

1998

**சென்றல்-**

**சென். ஜோன்ஸ்**

மார்ச் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள துடுப்பாட்டத்தின் போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் விளம்பர பனர், கட் அவுட் என்பவற்றை வைக்க விரும்பும் வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அலுவலகத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

- அதிபர்

(சி/3087)



**கண்ணீர் அஞ்சலி**

எங்கள் ஆருயிர் நண்பி

பா. றாகினி அவர்களின் அன்புத் தாயார்

**செல்வகுமாரி பாலசேகரம்**

(செல்வி)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூன்றாம் வருட, நான்காம் வருட மாணவர்கள், விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(53987)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. யோசனைகள் வேடிக்கைக்குரியவை!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 11

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசமைப்பு சீர் திருத்தம் குறித்து நீண்டகாலமாக பல்வேறு மட்டங்களில் ஆராயப்பட்டு வந்தன. ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது ஐ. தே. க. முன்வைத்துள்ள சில மாற்று யோசனைகள் வேடிக்கைக்குரியனவாக இருக்கின்றன''

கொழும்பு தேசிய சேமிப்பு வங்கியில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் பேசுகையிலேயே நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஐ. தே. கவின் பிரேரணைகளில் சிறிதளவேனும் நேர்மையைக் காண முடியவில்லை. உதாரணமாக ஐ. தே. கவின் யோசனைப்படி மாகாண சபைகளின் செயற்பாடுகளை நாடாளுமன்றத்தில் உள்ள 50 சதவீத அங்கத்தவர்களின் ஆதரவுடன் இடை நிறுத்தி வைக்கமுடியும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தைக் கூட இவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

இத்தகைய அரைகுறை யோசனைகளில் தற்போதைய பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டுமாயின் அரசாங்க தரப்பினருக்கும் எதிர்கட்சியினருக்கும் இடையே பொதுவான இணக்கப்பாடு ஏற்படுவது அவசியமாகும்.

அரசியலில் இருகுழுக்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவது இயல்பு எனினும் இந்தக் கருத்து வேறுபாடுகளின் காரணமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் அரசாங்கத்தை வேண்டும் என்றே எதிர்ப்பது எதிர்க்கட்சி செய்யத் தகுந்த காரியம் அல்ல.

தேசிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு பல கட்சிகள் ஒருங்கிணைந்து செயற்படமுடியும்.

வட - அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. தீவிரவாதிகளின் பிரச்சினை தொடர்பாக பிரிட்டனின் தொழிற்கட்சியும், கன்சர்வேட்டிவ் கட்சியும் ஒருங்கிணைந்து பொதுவான நிலைப்பாட்டினைக் கடைப்பிடித்து வருகின்றன — இப்படி அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (உ-3)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, மார்ச் 11

தென்மராட்சி பிரதேச சனசமூக நிலையங்களின் மேம்பாட்டிற்கான செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் இப் பகுதி பாலர் பாடசாலைகளின் கழகம் அமைத்தலும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அறவழி செயலகத்தில் யாழ். பிராந்திய சனசமூக அபிவிருத்தி அலுவலர் சி. பகீதரன் தலைமையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரீ. வி. கிருஷ்ணசாமி கலந்து கொள்வார்.

தென்மராட்சிப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-117)

## பங்கீட்டுக்கு சீனி

அரியாலை மார்ச் 11

யாழ். பலநோக்குக் கூட்டுறவு சங்கம் கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ சீனியை மக்களுக்கு விநியோகித்து வருகின்றது. (இ-17)

## மருந்து இன்னும் வந்து சேரவில்லை

வடமராட்சி, மார்ச் 11

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

முதலாம் கந்தாயத்துக்கான மருந்து வகைகள் இவ் வைத்தியசாலைக்கு இன்னமும் வந்து சேரவில்லை. ஏற்புத்தடை ஊசி மருந்துக்கும் தட்டுப்பாடு இருந்து வருகிறது. (இ-173)

## 80 ஆயிரம் பக்கெட் சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். மாவட்ட புனரமைப்புப் பணிக்காக இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள 80 ஆயிரம் சிமெந்து பக்கட்டுகளை 9 பிரதேச செயலகங்களில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கவென இந்த சிமெந்து பிரதேச செயலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் —

சிமெந்து பெறத்தகுதியானவர்களின் விவரங்கள் கிராமசேவையாளர் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் —

யாழ். செயலக அதிகாரி தெரிவித்தார்.

ஒவ்வோர் பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள சிமெந்து விவரம் வருமாறு:-

சங்கானை — 9 ஆயிரம், சண்டிலிப்பாய் — 10 ஆயிரம், உடுவில் — 10 ஆயிரம், தெல்லிப்பழை — 12 ஆயிரம், கோப்பாய் — 12 ஆயிரம், வேலணை — 6 ஆயிரம், யாழ்ப்பாணம் — 8 ஆயிரத்து 800, நல்லூர் — 7 ஆயிரத்து 500, ஊர்காவற்றுறை — 5 ஆயிரம். (உ-3-7)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் ! இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் முன்னைநாள் பிரதம பகுதித் தலைவர் திருமதி பி. கு. பெனடிக்ற் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வர். (உ-51)

★ ★ ★

மட்டுவில் கமலாசனி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் கலந்து கொள்வார். (உ-117)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிபர் மு. நாகேந்திராசா தலைமையில் நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (உ-117)

★ ★ ★

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில அதிபர் கு. கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசனும் சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. கைலைநாதன், உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் ஐ. வரதராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-117)

## யாழ்.

(7 ஆம் பக்க தொடர்)

எமது பெண்களை தொழில் துறையில் ஈடுபடுத்தி வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதுடன், அவர்களின் எதிர்காலத்திற்கு உதவும் நோக்குடனும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடத்திய இந்தப் பயிற்சி முகாம் வழி வகுத்துள்ளது.

இந்தப் பயிற்சியின் போது சிறு வியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கு எழுதுதல், உற்பத்தி முகாமைத்துவம், திட்ட அறிக்கை தயாரித்தல், தொழில் நுட்பப் பரிமாற்றம், எலக்ரோனிக் கைக் கடிகார உற்பத்தி, தோற் பொருள்கள் உற்பத்தி, உணவு உற்பத்தி எனப் பல துறைகளில் துறை சார்ந்த நிபுணர்களினால் பயிற்சி அளிக்கப்பட்டது.

### புதிய உத்வேகம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபைத் தலைவர் வசந்த ஜெயசிங்கவும் கைத்தொழில் அபிவிருத்திச்சபை வடபிராந்திய முகாமையாளர் ரி. கனகசபையும் இணைந்து இந்தப் பயிற்சிப் பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

மகளிர் தொழில் முயற்சி தொடர்பாக பிலிப்ஸ்பன்ஸில் விசேட பயிற்சி பெற்ற திருமதி ஐராணி பெர்னாண்டோ பெண்களுக்கான பயிற்சிகளை சிறப்பாக வழங்கினார். தொழில் முயற்சி அபிவிருத்தி ஆலோசனைப் பணிப்பாளர் குலரட்ண உட்பட கொழும்பிலிருந்து எட்டு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பத்து நாள்கள் தங்கி நின்று இந்தப் பயிற்சி பட்டறையை சிறப்பாக நடத்தினார்கள்.

தொழில் முயற்சிகளில் கால் வைப்பதற்கு நம்பிக்கை அற்றிருந்த எங்களுக்கு இந்தப் பயிற்சி நல்ல உற்சாகத்தைத் தந்துள்ளது. பயிற்சிக்கு முன்பு இருந்ததை விட பயிற்சியை முழுமையாக முடித்துக் கொண்ட போது ஒரு புதிய உத்வேகம் பெற்றுள்ளோம் — என்று பயிற்சி பெற்ற பெண்கள் நம்பிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இதே போன்று மேலும் பல தொழில்துறை பயிற்சிகளை நடத்த யாழ். [illegible] யைக் கட்டியெழுப்புவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவ வேண்டும்.

## ஏமாற்றத்துடன் திரும்பிய கப்பல் பயணிகள்

யாழ்ப்பாணம், மார்ச். 11

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு நேற்று புறப்பட்ட 'லங்கா முடித' கப்பலில் பயணம் செய்வதற்காக யாழ். ரயில் நிலையத்துக்குச் சென்ற பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

திருகோணமலையில் தங்கியுள்ள வடபகுதி அகதிகளை அழைத்து வருவதற்காக 'லங்கா முடித' கப்பல் நேற்று காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு புறப்பட்டது.

இக்கப்பலில் காங்கேசன் துறையிலிருந்து ஒருதொகுதி பயணிகள் அழைத்துச்செல்லப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதில் பயணம் செய்வதற்காக ஏராளமானோர் நேற்று யாழ். ரயில் நிலையத்துக்குச் சென்றனர்.

பயண டிக்கெட் மற்றும் பயண ஆவணங்களைப் பெற்று பயணிகள் காத்திருக்க, கப்பலில் பயணிகள் அழைத்துச்செல்லப்படமாட்டார்கள் என்று திடீரென வந்த உத்தரவை அடுத்து அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக பயணிகள் அழைத்துச் செல்லப்பட வில்லை என்று நேற்று மாலை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (உ-3)

## கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு நேற்றுப் புறப்பட்ட ''லங்கா முடித'' கப்பலில் பயணிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்றிச் செல்லப்படவில்லை என்றும் —

இதனால் பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக கவலை தெரிவிப்பதாகவும் —

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

அடுத்த கப்பல் சேவை இடம்பெறும் திகதி குறித்து 'உதயன்' பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (உ-3)

## கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் 1997 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், அதற்கு உதவிய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறும். (உ)

## கருத்தரங்கு

யாழ்ப்பணம், மார்ச். 11

யுனிசெவ் அமைப்பின் ஆரம்பக்கல்விச் செயற்திட்டம் தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 8-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறும்.

ஆரம்பக்கல்வி தொடர்பான இக்கருத்தரங்கில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும், ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே. கந்தசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-7)

★ ★ ★

கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் ''சுவாமி விவேகானந்தரின் அபிலாஷையாது?'' என்ற கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஆ. இராசகோபால் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சேவாச்சிரம சிவாமி சித்ரூபானந்தா கலந்து கொண்டு உரையாற்றுவார். (இ-135)

## தட்டி வான் சேவை

வடமராட்சி, மார்ச் 11

பருத்தித்துறை — நாகர் கோயில் தட்டிவான் சேவை மீண்டும் எதிர்வரும் திங்கள் முதல் ஆரம்பமாகவுள்ளது. (இ-173)

## கிரிக்கெட்

பருத்தித்துறை வாணி நகைமாளிகையின் ஆதரவில் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இலக்கணாவத்தை விளையாட்டரங்கில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (உ-15)

## உலர் உணவு விநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான 60 ஆவது ''ஏ பி'' முத்திரைப் புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செயலக புனர்வாழ்வு பகுதியினர் தெரிவித்தனர்.

அரிசி, மைசூர் பருப்பு, சீனி, பால்மா போன்ற பொருள்கள் இம்முறை வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இந்தப் புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்களை கிளைகள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, (இ-17)

## அன்னாசி இஞ்சி துண்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். மாவட்டத்தில் அன்னாசி, இஞ்சி பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தும் வகையில் அன்னாசி, இஞ்சி துண்டங்கள் இன்று புதன் முதல் விநியோகம் செய்யப்படவுள்ளன.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகம் விவசாயப் போதனாசிரியர்கள் மூலம் இவற்றை விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அன்னாசி, இஞ்சி பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் ஆர்வமுடைய விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னாசி நடுகைத் துண்டு ஒன்று 6 ரூபா வீதமும், இஞ்சி ஒரு கிலோ 100 ரூபா வீதமும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புல்மோட்டையில்....

(முதலாம் பக்கத் தொடர்)

கையின்படி—

கடந்ததிங்கள் இரவு 11.30 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து தெற்கு நோக்கி இரண்டு அணிகளில் சென்று கொண்டிருந்த — சுமார் 15 வள்ளங்களைக் — கொண்ட புலிகளின் படகுத் தொடரணியை கடற் படையினர் கண்டிருக்கிறார்கள். திருகோணமலை போல்டர் முனையில் இருந்து சற்றுத் தூரத்தில் இரு அணிகளாக இந்தப் படகுகள் சென்று கொண்டிருந்ததை அவதானித்த கடற்படையினர்பீரங்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

றடார் சகிதம் முன்னணியில் சென்ற புலிகளின் கட்டளைப் படகு முதலில் நாசமானது. இதன் பின்னர் மேலும் 3 அல்லது 4 படகுகள் பலத்த சேதங்களுக்குள்ளாகின.

வள்ளங்களில் வந்தபுலிகள் பதில் தாக்குதலை நடத்திக் கொண்டு முல்லைத்தீவை நோக்கிப் பின்வாங்கிச் சென்றனர் என்றும்—

அதிகாலை வரை சண்டை இடம்பெற்றது என்றும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த சம்பவத்தில் 7 புலிகள் கொல்லப்பட்டனர் என்பதை அவர்களின் ஒலிபரப்பு மூலம் அறிய முடிகிறது என்றும்—

கடற்படையினரில் 4 பேர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## புலிகளின் தகவல்

திருகோணமலையிலிருந்து ரோந்து வந்த கடற்படையினரின் அதிவேக டோறாப் படகுகள் மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் அதிவேக டோறா பீரங்கிப்படகு சேதமடைந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

கடற்படையின் அதிவேக டோறா படகுகளுக்கும், கடற்புலிகளுக்கும் இடையே புல்மோட்டைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணிமுதல் நேற்று அதிகாலை 4.00 மணிவரை கடற்சமர் இடம்பெற்றது.

இக்கடற் சமரில் அதிவேக டோறா பீரங்கிப்படகு சேதமடைந்தது.

கடற்படைத் தரப்புச் சேதம் சரியாகத் தெரியவில்லை என்றும்—

புலிகள் தரப்பில் இருகடற்புலிகள் களப்பலியானதாகவும்—

'புலிகளின்குரல்' மேலும் அறிவித்தது.

மேஜர் கருணாகரன் (தங்கவேலாயுதம் சசி — யாழ்ப்பாணம்), கப்டன் கோமளன் (அரசலிங்கம் சிவகுமார் — யாழ்ப்பாணம்) ஆகியோரே களப்பலியானவர்களாவர்.

இச்சமரில் மூன்று டோறா படகுகள் சேதமடைந்ததாகவும்—

நான்கு கடற்படையினர் காயமடைந்ததாகவும்—

திருகோணமலைக் கடற்படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3-164)

# வாஜ்பாய்..

(முதலாம் பக்கத் தொடர்)

பதி இக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதாக் கட்சி தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளதாலும் —

தேர்தலுக்கு முந்தைய பெரிய கூட்டணி என்பதாலும் —

இத்தகைய கடிதத்தை தாம் எழுதுவதாக அக் கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றத் தலைவராக வாஜ்பாய் தெரிவு செய்யப்பட்டமைக்கு தமது வாழ்த்துக்களையும் அக் கடிதத்தில் நாராயணன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி நாராயணனை வாஜ்பாய் நேற்று மாலை சந்தித்து 45 நிமிட நேரம் உரையாடினார்.

ஆட்சி அமைப்பதற்கு தமக்குள்ள வலுவை எழுத்து மூலம் தெரிவிப்பதாக ஜனாதிபதியிடம் வாஜ்பாய் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்)

புறப்பட்டனர். நேற்றுக் காலை 9.45 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவர்கள் வந்து இறங்கினர்.

சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகளை முடித்து வெளியே வந்த இவர்களில் 43 தமிழர்களை கட்டுநாயக்கா பொலீஸார் கைது செய்து பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

உள்ளூராட்சி, மாகாண சபை அமைச்சர் அலவி மௌலானா, ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இவர்களின் விடுதலை தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து, 43 தமிழர்களும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-3-5-ரீ)

# குருநகர்....

(முதலாம் பக்கத் தொடர்)

கேட்டன. ஷெல்களும் வீழ்ந்து வெடித்தன.

இரவு 10.45 மணியளவில் ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது திடீரென வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வீட்டுக்குள் இருந்த தந்தையும் மகனும் காயமடைந்தனர்; வீட்டின் கூரையும் வீட்டில் இருந்த இரண்டு சைக்கிள்களும் சேதமடைந்தன.

காயமடைந்த ஞானேந்திரம் பசில் (வயது 44), அவரது மகன் பசில் பசீதரன் (வயது 14) ஆகியோர் அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இரவு வேளை திடீர் திடீரென வெடித்த ஷெல்கள் மற்றும் வேட்டுச் சத்தங்களால் யாழ். கரையோரப் பகுதி மக்கள் பெரும் கலவரமடைந்து காணப்பட்டனர்.

கரையோரப் பகுதியில் இரவு வேளையில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட பின்னர் சில வீடுகளின் கதவுகள் கடுமையாகத் தட்டப்படுவதாகவும் —

சில வீடுகள் அவ்வப்போது கல்வீச்சுக்கு இலக்காவதாகவும் —

அப்பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

இச்சம்பவங்களுக்குப் பின்னர் நேற்றுப் பகல் குருநகர், தொடர்மாடி, சவக்காலைச் சந்தி மற்றும் அண்மித்த பகுதிகள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன. (உ-5-15-17-51-139)

# யாழ். முதல்வர்....

(முதலாம் பக்கத் தொடர்)

5 உறுப்பினர்களின் இடங்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி நியமித்த புதியவர்கள் விவரம் நேற்று தேர்தல் ஆணையாளரால் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டதை அடுத்து அவர்களும் இன்று சத்தியப் பிரமாணம் செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் தெரிவு செய்யப்பட்ட இரு உறுப்பினர்களில் ஒருவர் இன்று பதவிப் பிரமாணம் செய்யவிருப்பதாகவும்—

தமது கட்சிப் பிரதிநிதிகள் இன்றைய விழாவில் பங்குபற்றுவர் என்றும் —

ஈ. பி. ஆர். எல், எவ். பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி. சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் இன்றுபதவிப் பிரமாணம் செய்ய மாட்டார்கள்என்று ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார்.

''கடந்த 15 வருடங்களாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மூலம் நிர்வகிக்கப்படாத இந்த உள்ளூராட்சி சபைகளுக்கு இக்காலத்தில் போதிய நிதிவழங்கப்படவில்லை. ஆகவே புதிதாக தெரிவாகியுள்ள சபைகளுக்கு போதியளவு நிதி வழங்க வேண்டும் என்றும்—

''உள்ளூராட்சிச் சபைகள் எவரது தலையீடும் இன்றி செயற்பட உத்தரவாதம் வழங்கவேண்டும் என்றும் — கோரியுள்ளோம்.''

''அந்த இரு விடயங்களிலும் சாதகமான பதில் கிடைத்த பின்பே நாம் சத்தியப் பிரமாணம் செய்வோம்''—இப்படி அவர் கூறினார்.

அதேவேளை —

தமிழர் விடுதலைக் கூட்டணியால் கைப்பற்றப்பட்ட வலி—வடக்கு பிரதேச சபையின் தலைவர், உப - தலைவர் பதவியேற்பும் இன்று இடம்பெறவிருக்கிறது.

இந்த பதவியேற்பு வைபவங்களில் பங்குபற்றுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களான வீ. ஆனந்த சங்கரி, மாவை சேனாதிராசா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (உ-3)

# கடற்படை..

(முதலாம் பக்கத் தொடர்)

மோதி சிதறடித்து விட்டு தொடர்ந்து முன்னேறியது.

அப்போது நீந்திக் கொண்டிருந்த மீனவர்களுள் ஒருவரும் கடற்படைப் படகால் மோதியடிக்கப்பட்டார், அதனால் படகின் கீழ்ப்பக்கமாக தண்ணீருக்குள் சென்ற அவர் படகின் நீருந்து விசிறியில் சிக்குண்டு படுகாயமடைந்தார். துண்டிக்கப்பட்ட அவரது வலது கை கடலில் மறைந்து போனது.

இவரின் அருகில் நீந்திக் கொண்டிருந்த மற்றையவரான ம. டிமோஸ்லின் (வயது 20) என்பவர் கடலில் பாய்ந்த வேளை கடற் சுழியில் அகப்பட்டு திக்கு முக்காடியதாகவும் —

அவர் ஒருவாறு சுழியிலிருந்து மீண்டு வந்து பார்த்தபோது காயமடைந்தவர் முனங்கிக் கொண்டு கடலில் தத்தளிப்பதைக் கண்டு அடுத்தவர்களின் கட்டுமரத்தின் உதவியுடன் அவரைக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இம் மூன்று மீனவர்களின் கட்டுமரமும் உடைந்து சேதமடைந்ததுடன் இவர்களது மீன்பிடி உபகரணங்களும் நாசமாகின.

படுகாயமடைர்தவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். (உ-15-13-9137)


## உள்ளக தொலைபேசி அமைப்புக்கள்

உங்களுக்கு தேவையான உள்ளக தொலைபேசி இணைப்புக்கள் எம்மால் இணைத்து கொடுக்கப்படும்.

1) Electronic P. A. B. X.
(8 to 200 Lines)
2) Power Stabilizer GDT & Filter.
3) Audio Sound Reinforcement Systems.
1) Speaker Box Maximum 900W 3Wave

மேலதிக விவரங்களுக்கு:

**Electronic Engineering**
System (Pvt.) Ltd.,
No. 18 Chirampiyady Lane,
Jaffna.

(C/3086)



## கருத்தரங்கு

பொருள்: துணைதேடுதலில் பெற்றோரின் பங்கு
கருத்துரை வழங்குவோர்:
திருமதி கோகிலா மகேந்திரன்
(அதிபர் - சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பளை, உளவியலாளர்)
காலம்: 12 - 03 - 1998
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: " அகவொளி "
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி
யாழ்ப்பாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
[53973] இயக்குநர்.



## வெளி வந்துவிட்டது

கலாநிதி சபா. ஜெயராசா அவர்களின்
"ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும்"
கல்வி வழிகாட்டல் ஆலோசனைகள் தொடர்பான ஆசிரியர் தர உயர்வுக்கு வழிகாட்டும்; அனைத்து ஆசிரியர்களும் வைத்திருக்க வேண்டிய நூல்:
யாழ். முன்னணி புத்தகசாலைகளில் கிடைக்கும்.
வெளியீடு: பட்டதாரி ஆசிரியர்
(53986) வாண்மை விருத்தி அமைப்பு



எமது புதிய
வெளியீடுகள்!
அஜித்குமார் - மானு
நடித்த
★ காதல் மன்னன்
சுரேஸ் - சௌந்தர்யா
நடித்த
★ காதலைதிருடாதே
வீடியோ CD வெளியீடு!
★ பகவத்சிங்
ஓடியோ CD வெளியீடு!
★ சுந்தரபாண்டியன்
★ இன்டிபெண்டன்ஸ் டே
சுப்பர்லோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3091)



எமது புதிய
வெளியீடுகள்!
பாக்கியராஜ் - நக்மா
நடித்த
வேட்டியை
மடிச்சுக்கட்டு
அஜித்குமார் - மானு
நடித்த
காதல் மன்னன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3088)



**Electronic Engineering Systems (Pvt.) Ltd.**
**Colombo.**
Branch:
No. 18, Chirampiyady Lane,
Jaffna.

Greetings from the Electronic Engineering Systems (Pvt) Ltd. to the Staff and Students of Vembadi Girls' High School

We the Directors and Staff of Electronic Engineering Systems (Pvt.) Ltd. who supplied and installed the Telephone Systems send our sincere greetings on the occassion of the commissioning of the systems.

We are pleased to be associated as the pioneer suppliers of Telephone Electronic Switching Systems (D.PABX) to Educational Institutions in Jaffna.

M.Susruthan,
Building Better Communication,
World wide.

(C/3085)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org